DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: சாமு | Father's Name: முனிசாமி |
| Village: தும்பேரி, வாணியம்பாடி | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 82 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 14.02.2023.

OS 6/2019- பி.வா.சா.1

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>

01) இந்த வழக்கின் வாதிகள் இருவரும் எனக்கு என்ன உறவு என்றால் தங்கைமார்கள் ஆவார்கள். என் தந்தைக்கு இரண்டு மனைவிகள் உண்டு. எனது தாயார் இறந்த பிறகு தான் என் தந்தை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் இல்லை, என் தாய் உயிருடன் இருந்தபோதே என் தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். என் தாயார் எனக்கு நினைவு தெரிவதற்கு முன்பே என் தாயார் இறந்துவிட்டார் என்றால் இல்லை எனக்கு என் தாயார் நினைவு உண்டு, எனக்கு என் தாயாரின் பெயர் தான் மறந்துவிட்டது. என் அம்மா இறப்பிற்கான இறப்பு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் படிப்பறிவு இல்லாதவன் எனக்கு அந்த விவரம் தெரியாது.

02) எனது தாயார் உயிருடன் இருந்தபோதே எனது தந்தை வாதிகளின் தாயாரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்ற விவரத்தை எனது தரப்பு எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு எதிர்வழக்குரை பற்றி தெரியவில்லை. எனது முதல் விசாரணையில் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உறவுமுறைகள் சரியானவை என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம் உறவுமுறைகளை சொல்லியிருக்கிறேன். வாதிகளின் தாயாரான எனது சித்தி தான் என்னை சிறுவயதில் வளர்த்தவர் என்றால் சரிதான். என் தந்தை இறந்த பிறகும் நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வந்தோம் என்றால் இல்லை என் தந்தை உயிருடன் இருந்தபோதே பிரித்து கொடுத்துவிட்டார்.

03) வழக்கு சொத்திற்கு பட்டா என் தந்தை உயிருடன் இருந்தபோதே வாதிகளின் தாயார் பெயரில் இருந்து வந்தது என்றால் என் தந்தை பெயரிலும் இருந்தது, எனது சித்தி பெயரிலும், என் பெயரிலும் கூட்டாக வந்தது. என் பெயரிலும், எனது சித்தி பெயரிலும் பட்டா கூட்டாக இருப்பதால் வாதிகளுக்கு அந்த சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரியல்ல, அந்த சொத்தை நான் தான் கோவிந்தனிடமிருந்து கிரையம் வாங்கினேன் அதனால் பங்கு இல்லை. கோவிந்தனிடமிருந்து நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சங்கதியை எனது எதிர்வழக்குரையிலும், சாட்சியத்திலும் சொல்லாமல் தற்போது சொல்கிறேன் என்றால் நான் கோவிந்தனிடமிருந்து தான் சொத்தை கிரையம் வாங்கி பிறகு பரிவர்த்தனை பத்திரம் எழுதிகொண்டோம்.

04) நான் எனது சாட்சியத்தில் வாதிகளுக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பேதிருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருவதால் வழக்கு சொத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்று தான் எனது சாட்சியத்தில் சொல்லியிருக்கிறேன் என்றாலும், ஆனால் தற்போது அதனை மறைத்து வழக்கு

சொத்தை நான் கோவிந்தனிடமிருந்து கிரையம் பெற்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முனிசாமியின் மகள்கள் என்ற அடிப்படையில் வாதிகளுக்கு வழக்கு சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரியல்ல அவர்கள் எப்போதோ போய்விட்டார்கள், என் தந்தை எனக்கு தான் பாகம் கொடுத்து நான் கோவிந்தனிடமிருந்து கிரையம் பெற்றேன்.

05) வாதிகளுக்கு பாகம் உரிமையுள்ள வழக்கு சொத்தினை பொறுத்து நான் 4, 5 பிரதிவாதிகளுக்கு தானம் எழுதிகொடுக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தினை இன்றுவரை வாதிகளும் சேர்ந்து தான் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பேரன்கள் பெயரில் எழுதி வைத்த தான ஆவணங்கள் பெயரளவில் ஆனது என்றாலும், அந்த ஆவணங்கள் செயல்பாட்டிற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. எனது பேரன்கள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பேரன்கள் இருவரும் படித்து கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை ஒருவர் தான் படிக்கிறார், இன்னொருவர் விவசாய வேலை செய்து வருகிறார்.

06) எனது பேரன்கள் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தான ஆவணங்களின்படி பேரன்கள் பெயருக்கு பட்டா எதுவும் பெயர் மாற்றம் ஆகவில்லை என்றால் சரியல்ல பெயர்மாற்றம் ஆகிவிட்டது. நான் சொல்லும் பெயர் மாற்றம் ஆன ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பெயர்மாற்றம் ஆகிவிட்டது. நான் வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக எதிர்வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல, நான் ஏமாற்றவில்லை. வாதிகள் முனிசாமியின் மகள்கள் என்ற அடிப்படையில் வழக்கு சொத்தில் நான்கில் இரண்டு பாகம் அடையத்தக்கவர்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கானது வாதிகள் வேண்டியபடி தீர்ப்பாகத்தக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.